

'இந்தியா' கூட்டணியின் சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.



'இந்தியா' கூட்டணியின் சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி. அவர்கள், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, எம்.எல்.ஏ. அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஐரோப்பாவில் நடைபெறும் Monoco energy boat challenge எனப்படும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் போட்டியில் பங்கேற்பதற்காக தொடர்ந்து மூன்றாவது முறையாகத் தேர்வாகியுள்ள கோவையைச் சேர்ந்த தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் நேற்று முன்தினம் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அப்போது, மாற்று எரிபொருள் சக்தியாக பேட்டரி மூலம் இயங்கும் படகை வடிவமைத்து போட்டியில் கலந்து கொள்ள உள்ளதாக கூறிய மாணவர்களின் முயற்சியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாராட்டியதோடு மட்டுமின்றி மாணவர்களின் புது முயற்சி வெல்லட்டும் என்றும் வாழ்த்தினார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் வெற்றிகளை குவித்து வரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ப்ரித்வி சேகர் குறிஞ்சி இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆஸ்திரேலிய ஓபன் & ஸ்லோவேனியா ஓபன் டென்னிஸ் தொடர்களில் சாம்பியன் பட்டமும் – Polish Deaf Open Tennis போட்டியில் 3 ஆம் இடமும் வென்ற அவரை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தங்களது வெற்றிப் பயணம் தொடர நம் திராவிட மாடல் அரசு என்றும் துணை நிற்கும் என்று பாராட்டினார்.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் – திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக வழக்கறிஞர் அணித் தலைவர் கே.செல்வராஜ் ஆகியோரின் மகன் எஸ்.கே.திலீபன் – ஆர்.ஜி.ஜனனி இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி அண்ணா அறிவாலயத்தில் 18.6.2024 அன்று மாலை நடைபெற்றது. இவ்விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் எம்.சி, தெற்கு மாவட்ட அவைத் தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாட்டைச் சேர்ந்த சர்வதேச ஸ்குவாஷ் வீராங்கனை ஜோஷ்னா சின்னப்பா, ஒன்றிய அரசின் பத்மஸ்ரீ விருதை பெற்றதை தொடர்ந்து நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஸ்குவாஷ் விளையாட்டில் தொடர் சாதனைகளை படைத்துவரும், சர்வதேச அரங்கில் தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை தேடித் தந்துவரும் அவரது வெற்றிப்பயணம் தொடர வாழ்த்தினார்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் விக்கிரவாண்டி பேரூராட்சியில் இந்தியா கூட்டணியின் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகத்தை ஆதரித்து மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் , உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் உதயசூரியன் சின்னத்திற்கு வீதி, வீதியாக வாக்குகளைச் சேகரித்தனர். அமைச்சர் சி.வெ.கணேசன், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் , விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் துரை.ரவிக்குமார், ம.ஜெயச்சந்திரன், இரா.ஜனகராஜ், சக்கரை, வி.சி.க. திலீபன், நயினா முகமது, அப்துல் சலாம், பாலாஜி, தமிழ்ச்செல்வி பிரபு, சித்திக் அலி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## அடுத்த நூற்றாண்டுகளுக்கும்

# முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பெருமை பேசப்பட வேண்டும்!

### மணப்பாறை தொகுதி - துவரங்குறிச்சியில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!

திருச்சி, ஜூன் 21-

திருச்சி தெற்கு மாவட்டம், மணப்பாறை தொகுதி துவரங்குறிச்சியில் தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழா துவரங்குறிச்சி பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது. கலைஞருக்கு புகழ் சேர்க்கும் வகையில் அவரால் எழுதப்பட்ட திரைப்பட பாடல்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக திரைப்பட பின்னணி பாடகி மாலதி லக்ஷ்மன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பொன்னம்பட்டி பேரூர் கழகச் செயலாளர் நாகராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர். சிறப்பு அழைப்பாளராக திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ். ஆஸ்டின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். பொன்னம்பட்டி பேரூர் மன்ற தலைவர் சரண்யா நன்றி கூறினார்.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:-

புதுச்சேரியையும் சேர்த்து 40க்கு 40 வெற்றி பெற்றுள்ளோம், அந்த வெற்றிக்கு காரணம் பொது மக்களாகிய நீங்கள்தான். அந்த வெற்றியை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்றால் மக்களுக்கு நாம் கொடுத்துள்ள வாக்குறுதிகளை, அவர்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து அதனை நிறைவேற்றும் பணியில் முழுமையாக நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அதுவே அவர்களுக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடன் என முதல்வர் கூறியுள்ளார்.

கலைஞர் நூற்றாண்டு விழா மட்டுமல்ல அடுத்த நூற்றாண்டுகளுக்கும் கலைஞரின் பெருமையை புகழ்ந்து பேச வேண்டும் என்பதில் நாம் நன்றிக் கடன் பட்டவர்களாக இருக்கின்றோம் என்றார். விழாவில் திரளான தி.மு.க.வினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மாநகரச் செயலாளர் மதிவாணன், மாவட்டக் கழக நிர்வாகிகள் சேகரன், கோவிந்த ராஜ், குணசேகரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் சின்ன அடைக்கன், செல்வராஜ்,ராமசாமி, பழனியாண்டி, ஸ்ரீரங்கன், ராஜேந்திரன், நகரக் கழகச் செயலாளர் மு.ம.செல்வம், ஒன்றிய பெருந்தலைவர்கள் அமிர்தவள்ளி, குணசீலன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தமிழக முதல்வர்,கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில் பொதுப் பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உடல் நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வரும் நபர்களை பார்வையிட்டு ஆறுதல் கூறி,சிகிச்சையில் உள்ள நபர்களுக்கு அனைத்து விதமான உயர் சிகிச்சைகளை மேற்கொள்ள மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்கள். அருகில் எம்.எல்.ஏக்கள் வசந்தம் க.கார்த்திகேயன்,தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மற்றும் மருத்துவர்கள்,அரசு அதிகாரிகள் மாவட்ட ஒன்றிய நகர கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## தமிழகத்தில் கள்ளச்சாராயத்தை

# முழுமையாக தடை செய்ய அரசு கடும் நடவடிக்கை!

### அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

கள்ளக்குறிச்சி ஜூன் 21-

கள்ளக்குறிச்சியில் கள்ள சாராயம் குடித்து பாதிக்கப்பட்டு கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில் தமிழக அமைச்சர்கள் எ.வ.வேலு மற்றும் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு நலம் விசாரித்து ஆறுதல் கூறினார்கள்.

இதன் பின்னர் அமைச்சர் எ.வ.வேலு அளித்த பேட்டியில் கூறி இருப்பதாவது, கள்ளக்குறிச்சியில் நடக்க கூடாத சம்பவம் நடந்துள்ளது. இது மிகவும் வருத்தத்துக்குரியது. சாராயம் குடித்து பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் 74 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனை, விழுப்புரம் முண்டியம்பாக்கம் மருத்துவமனை, புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் 6 பேர் இறந்துள்ளனர். சேலம் மருத்துவமனையில் 3 பேர், புதுவை ஜிப்மரில் 3 பேர், முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் ஒருவர் என மொத்தம் 13 பேர் இறந்துள்ளனர். மேலும் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு என்ன வகையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என விவரங்கள் கேட்டு அறியப்பட்டுள்ளது.

தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்குமாறு மருத்துவர்களிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மெத்தனால் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்ட வகையில் சாராய வியாபாரி கண்ணுக்குட்டி, அவரது தம்பி தாமோதரன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். வேறு யாரேனும் இவர்கள் மூலமாக மெத்தனால் வாங்கி சென்று விற்பனை செய்து வருகிறார்களா என்று குறித்து போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்.

இது குறித்து தகவல் அறிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சர் மா.சுப்ரமணியன் மற்றும் என்னை விரைந்து செல்லுமாறு உத்தரவிட்டார். அதன் பேரில் வந்து விசாரித்தோம். சேலம், முண்டியம்பாக்கம், புதுவை ஆகிய மருத்துவமனையில் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்குமாறு சுகாதாரத் துறை அமைச்சர் அந்தந்த மருத்துவமனையை தொடர்ந்து அறிவுறுத்தி கொண்டு உள்ளார். கள்ளக்குறிச்சியில் 9 பேர் அபாயகர சூழ்நிலையில் இருந்து வருகின்றனர்.

அவர்களுக்கு போதிய தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் சிகிச்சை அளிக்க சேலம், திருச்சி,விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து மருத்துவக் குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். மேல் சிகிச்சைக்கு அனுப்ப 108 ஆம்புலன்ஸ் 32 தயார் நிலையில் மருத்துவமனையில் உள்ளது.போலீசாரின் மெத்தன செயல்பட்டால் கள்ளக்குறிச்சி எஸ்.பி. உள்ளிட்ட அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

கள்ளச் சாராயத்தை முழுமையாக தடை செய்ய தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்கும், கள்ள சாராயம் விற்பனை செய்தால் பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். அப்போது அமைச்சர் மா.சுப்பிரமணியன், எம்.எல்.ஏ.க்கள் வசந்தம் கார்த்திகேயன், தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மாவட்ட ஆட்சியர் ஷர்வன் குமார் வருவாய் அலுவலர், சத்தியநாராயணன், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் நேரு, மாவட்ட சேர்மன் புவனேஸ்வரி பெருமாள் ஆகியோர் உடன் இருந்தனர்.



திருச்சி தெற்கு மாவட்டம், மணப்பாறை தொகுதி துவரங்குறிச்சியில் தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழா துவரங்குறிச்சி பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது. கலைஞருக்கு புகழ் சேர்க்கும் வகையில் அவரால் எழுதப்பட்ட திரைப்படப் பாடல்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக திரைப்பட பின்னணி பாடகி மாலதி லக்ஷ்மன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பொன்னம்பட்டி பேரூர்க் கழகச் செயலாளர் நாகராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர். சிறப்பு அழைப்பாளராக திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ். ஆஸ்டின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். பொன்னம்பட்டி பேரூர் மன்ற தலைவர் சரண்யா நன்றி கூறினார்.